கடித எண். 3975/ஏ/2005–1
பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்திருத்தத் (ஏ) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

நாள்: 22.2.2005.

அனுப்புநர்

திருமதி லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப.,
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்

அனைத்து அரசு செயலர்கள், சென்னை–9,
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை–9.
அனைத்து துறைத் தலைவர்கள்/ மாவட்ட ஆட்சியர்கள்/
மாவட்ட நீதிபதிகள்/குற்றவியல் தலைமை நீதிபதிகள்.
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
பதிவாளர், தமிழ்நாடு அரசு நிர்வாக தீர்ப்பாயம், சென்னை–104.

ஐயா,

பொருள் : பொதுப்பணிகள் – அனைத்து அரசுப் பணியாளர்களும் கட்டாயமாக நிழற்பட அடையாள அட்டை அணிதல் – தொடர்பாக

பார்வை : 1. அரசு ஆணை நிலை எண் 363, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஏ) துறை, நாள் 1.12.2004.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் 6.1.2005 நாளிட்ட கடித எண் நி2./14037/2004.

*******

பார்வையில் காணும் அரசாணையில் அனைத்து அரசுப்பணியாளர்களும் அலுவலகத்தில் பணியாற்றும் நேரங்களில் தவறாமல் அவர்களது நிழற்பட அடையாள அட்டை அணிதல் வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வடையாள அட்டையின் மாதிரியும் மேற்படி அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாதிரி அடையாள அட்டையில் அரசுப்பணியாளர்களது பெயர் மற்றும் பதவி ஆகியவை ஆங்கிலத்தில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. அன்றாட நிருவாகத்தில் தமிழ் மொழிப் பயன்பாட்டை அதிகரிக்கவும், ஆட்சிமொழித் திட்டத்தை முழுமையாக செயல்படுத்தவும் அரசு அலுவலர்கள் மற்றும், பணியாளர்கள் அணிந்துகொள்ள வேண்டிய அடையாள அட்டை தமிழில் இருக்கவேண்டியது இன்றியமையததாகும் என பார்வை 2–ல் காணும் கடிதத்தில் தமிழ்வளர்ச்சி இயக்குநர் தெரிவித்து மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் தமிழில்

அமைந்த அடையாள அட்டைகளை அணியும் வகையில் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

3. அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தங்களின் பெயர் மற்றும் பதவியினை மற்ற அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் அடையாளம் காட்டிக் கொள்வதற்காக மட்டுமின்றி பொது மக்கள் அரசு அலுவலகங்களுக்கு அலுவலின் நிமித்தம் வரும்போது சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களின் பெயர் மற்றும் பதவியினை அறியும் பொருட்டும் அடையாள அட்டை அணிகின்றார்கள். எனவே தமிழில் மட்டும் அடையாள அட்டை அணிவது பொருத்தமாகாது. ஏனெனில் தமிழ் அறியாத பிற மொழியினருக்கு ஆங்கிலத்தில் உள்ள அடையாள அட்டை மிகவும் உதவியாகவே இருக்கும். இருப்பினும் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணையின்படி அரசுப்பணியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்க எல்லா துறைகளிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாலும், ஏற்கனவே வழங்கியுள்ள எல்லா அடையாள அட்டைகளையும் மீண்டும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிட ஆணையிட்டால் செலவு மிக அதிகமாகும் என்பதாலும், இன்னமும் வழங்கப்படாதவர்களுக்கு இனிமேல் வழங்குவதாக இருப்பின் இனிமேல் வழங்கப்படவுள்ள அடையாள அட்டையில் பெயர் மற்றும் பதவியினை மட்டும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஒன்றின்கீழ் ஒன்று இடம் பெறுமாறு மாற்றி அமைத்து உரிய அடையாள அட்டைகள் வழங்குமாறு அனைத்து துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

24/2/05

அரசு தலைமைச் செயலாளருக்காக

24/2/05.

<u>நகல்</u>

முதலமைச்சரின் செயலர் (I, II, III), சென்னை–9,
தலைமைச் செயலரின் தனிச்செயலர், சென்னை–9,
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை செயலரின் தனிச்செயலர், சென்னை–9,
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை செயலரின் தனிச்செயலர், சென்னை–9,
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அனைத்து பிரிவுகள்/ அலுவலர்கள், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி இயக்குநர், குறளகம், சென்னை–108.

மூலக்கோப்பு/உதிரிகள்.